**ஓம் ஈஸ்வராய நமஹ!**

**ஆறுமுகனார் தீட்சையின் போது (27-12-2019), அவர் உரைத்த உபதேசம்**

மேன்மையுறும் வளங்கள் யாவும்
மேதினியில் செழித்திடவே
மென்மையுறும் திரைகள் யாவும்
மெருகேற்றம் கண்டிடவே

தேன்சுவைக்கும் வண்டுகள் யாவும்
தேகமதனைத் தீண்டிடவே
தென் திசையில் திரள்பவை யாவும்
தெவிட்டா சுவையினை நல்கிடவே

நான்கிழையும் மூவிழையும்
நல்லாற்றல் பெருக்கிடவே
விழிகளிலே பார்வை ஒன்றே
ஒளிதீபம் காட்டிடவே

விண்குருதி ஒளியாற்றல்
விரைந்தெங்கும் பரவிடவே
மண்குருதி தூய்மையுற்றே
மறை பொருளைத் தீண்டிடவே

திரைகள் யாவும் விலகிடவே
ஆன்ம ஒளி பெருகிடவே
தீட்சைதனை ஏற்றிடுவீர்;

கழிவுகளைப் போக்கிடுவீர்;.

கண் இமைகள் திறவுகொண்டால்
கதிரொளியும் கண்டிடலாம்
உள் விழிகள் திறவு கொண்டால்
ஆன்ம ஒளியும் கண்டிடலாம்

திரைகள் ஏழும் விலகிநின்றால்
தீட்சண்யம் கூடிவிடும்
தீட்சைகளை ஏற்றிட்டால்
தீமைகளும் கரைந்துவிடும்

மானுடராய்ப் பிறவி கண்டால்
மாண்புடையோர் என்றுணர்வீர்
மாதவமே புரிந்திட்டால்
மானுட உடல் தரித்திடலாம்

உணர்வுகள் ஓங்கிவிடும்
உச்சம்தனைத் தீண்டிவிடும்
விடுபடும் கழிவுகளோ
வினைகள் பல களைந்துவிடும்
தீயினால் விழிகளைத் தூய்மையுறுத்திட
தீண்டுமாம் திரைகளை
துண்டுமாம் ஆன்ம ஒளியினை

Gnanalayam

கசடுகள் கரைபட கர்மங்கள் விடுபட
சுடராய் ஒளிர்விடும் சீவனும் மலர்ந்திட
குருவருள் ஓங்கிட குலமது தழைத்திட
குருதியும் உருகிட கும்பமும் நிறைந்திட
வானமும் விரிந்திட வட்டமும் பெருகிட
தெளிவு கண்ட சிரசணுக்கள்
ஏகாந்தம் உணர்திடுமாம்

திறவு கொண்ட விழிகள் இரண்டும்
ஒரு விழியை இணைத்திடுமாம்
மூவிழிகள் ஒளிர்வு கண்டால்
முக்கோணம் மலர்ந்திடுமாம்
உயர்வுநிலை எய்திட்டால்
உணர்வுநிலை பெருகிடுமாம்

ஊழ்வினைகள் கரைந்திட்டால்
உன்மத்தம் கண்டிடலாம்
உலகாளும் ஈசனையே
உலகின் வசம் ஈர்த்திடலாம்

பதமுற்ற ஆன்மாவே
பரமனடி நிலைத்திருக்கும்
பரகதியே உமைச் சூழ
பண்படுவாய் மானுடனே.

Gnanalayam

மானுட வாழ்விற்கு எல்லைகள் உண்டு, மானுட ஆன்மாவிற்கோ எல்லைகள் கிடையாது. பிறவிகள் பல கண்ட ஆன்மாவானது இறுதியில் இணைவது ஈசனிடமே. தென் எல்லைக்குமரியிலே முப்பெரும் பாகம் உண்டு. கடல் என்பார், ஆழி என்பார், நீர் சூழ்ந்த திசைகள் என்பார். மூவிதழ்கள் மலர்வது போன்று திசைகள் மூன்றும் இணைகின்றன. ஆழ்ந்த நீர் நிலைகளாம் சமுத்திரமும் இணைகின்றன. அவ்விதமே இரு விழிகளின் பின்புறமும் அமைந்த திரைகள் விலகி நின்றால் மூன்றாம் விழியான ஆன்மாவோடு இணைந்திடலாம். ஆன்மாவோடு இணைவது என்பது யாது?

கலியுலகினிலே வாழ்கின்ற மானுடர்கள் கற்று அறிகின்ற சூழல்கள் யாவும் கடல் நீர்pன் ஒரு துளி போன்றவையே. ஞானம் என்பதோ மூன்று கடல் நீரின் முழுமையையும் உள்ளடக்கியதாகும். ஒளி பொருந்திய இரு விழிகளும் அகண்ட ஆழிக்கு ஒப்பானவையே. ஆன்ம ஒளியோடு விழிகளின் ஒளிகள் யாவும் இணைவதே வாழ்வின் நோக்கமாக அமைந்திடல் வேண்டும்.

தீட்சைகள் பெறுவதன் மூலம் ஞான ஒளியானது பெருகும். விழித்திரைகள் யாவும் மென்மையுறும், பின்னர் இளகியே உருகிக் கரைந்திடும். உள் விழிகளால் ஆன்ம ஜோதியினைத் தரிசித்திட்டால் மானுடர்கள்; மதிமயக்கம் கொண்டிட இயலாது, மாயையினில் வீழ்ந்திடவும் இயலாது, வினைகள் யாவும் விலகிவிடும் அகந்தையும் மாய்ந்துவிடும்.

இரண்டாம்படி நிலையில் அளிக்கப்படும் தீட்சையானது கடும் பாறைகளையும் தகர்த்திட வல்லது. பல பிறவிகளாய் படிந்திட்ட கழிவுகளின் மூலம் திரைகளாய் உருவாகி விழிகளை மறைத்திடும் கழிவுகள் யாவும் விலகிடும். வழிகளின் சுழற்சி என்பது கடும்

பாறையினையும் இடம் பெயர்ந்திட வகை புரிந்திடும் என்றுணர்க. மண்ணிலே பதிந்துள்ள பாறையானது இடம் பெயர்க்கப்பட்டால் எளிதாய்த் தகர்க்கப்படும். அதனைப் போன்றே வினைப்பதிவுகளும், அகந்தையின் கழிவுகளும் அடங்கிய கொடும் பாறை போன்றே திகழ்ந்திடும் விழித்திரைகள் யாவும் இரண்டாம் படிநிலை தீட்சையின் மூலம் தகர்க்கப்படும்.

மூன்றாம் படிநிலை தீட்சை என்பது முழுமையான தூய்மை நிலையினையே அருளிடும். தீட்சைகளைப் பெறுவதன் மூலம் கடும் பாறைகளைப் போன்ற விழித்திரைகள் அகற்றப்படும். உயரிய மாணிக்கம் போன்று சுடர்விடும் ஆன்மாவினை உணர்ந்திட இயலும். ஏழாம் திரையானது விலகினால் ஆன்ம ஒளியானது உடலினிலே பரவிடும். ஆன்ம ஒளியினைக் கொண்டே உடலின் அணுக்கள் யாவும் மாற்றமுறும். ஒளியுடலினைப் பெற்றிட ஏழுதிரைகளும் விலகிடல் வேண்டும்.

கலியுலக மானுடர்கள் பலரும் ஓரிரு திரைகள் விலகிடவும் வழிவகைப் புரிவதில்லை. உயிரினை உணர்ந்து விடுவித்தால் மாத்திரமே கலி எல்லைப் போராட்டங்கள் யாவும் விடுபடும். பிணிகள் யாவும் தொடர்ந்திடும், துன்பங்களும் துயரங்களும் பெருகிடும். இதனின்று விடுபட வேண்டுமெனில் தீட்சைகளே பலனளிக்கும். சீரான குருவினிடமிருந்து முறையான தீட்சைகளைப் பெற்று தொடர் செயலாய் பயின்றிட்டால் ஜீவன் என்பது ஒளி கூடும். ஒளிகூடிய ஆன்மா பரமாத்மாவின் ஆற்றல்களை தடைகள் ஏதுமின்றி ஏற்றிடும். பரம ஒளி என்பது அமிர்த ஆற்றலாய் உருமாறிடும்.

Gnanalayam

சிரசினிலே உள்ள சுரபிகள் யாவும் வற்றினால் ஆன்மாவின் ஒளியானது தரம் பிரிக்கப்படாது ஒற்றை அணுவின் மூலம் உடலின் இடப்பாகத்திற்கும், வலப்பாகத்திற்கும் சென்றடையும். மின் அலைகளும், காந்த அலைகளும் உடலில் பரவிட சுரபிகள் யாவும் செயலிழக்க வேண்டும் என்பதே நியதியாகும். பரமனின் ஒளியலைகளை ஏற்று உடலானது விண்ணின் தன்மை கொண்டிட முயன்றிடும்.

தீட்சைகளை ஏற்று சுரபிகளை செயலிழக்கச் செய்திட்டால் ஒளியுடல் பெற்றிடும் மார்க்கமும் புலப்படும். அறியாமைதனைத் துறந்து ஞான மார்க்கத்தில் பயணித்திடும் ஆன்மாக்கள் விடுதலைதனை எய்தி ஈசனைச் சரணாகதம் புரிந்திட கலியுகம் விரைந்து நிறைவுற்று சத்ய யுகமானது உதித்திடும்;.

மானுடர்கள் எத்தகையச் செயலினை ஏற்றிட்டாலும் பிறவாப் பெருநிலையினை ஏற்றிடத் தவறினாுல் கலி எல்லைப் போராட்டங்களும் பெருகிவிடும். பரமனின் பதத்தினை அடைவது ஒன்றே அனைத்து செயலிகளின் எல்லையாகும். எண்ணங்களையும், சொற்களையும், செயல்களையும் அழித்து பரமனின் பதம் பற்றி ஆன்ம ஆற்றல் பெருகிட வாழ்ந்திடவே வாழ்த்துகின்றோம்.

Gnanalayam